**பதவிய பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதவிய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று/தேறிய சொத்துக்கள்/உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தௌிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்தில் ரூபா 548,986 தொகைக்கு கொள்வனவு செய்த 96 பியெஸ்ரா பிடியுடனான கதிரைகளின் பெறுமதி மீளாய்வாண்டின் போதும் மீள கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால், நிலையான சொத்துக்கள் ரூபா 548,986 இனால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 சொத்துக்களுக்குரிய மீளாய்வாண்டின் சேர்ப்பனவுகள் ரூபா 3,034,414 தொகைக்காக பெறுமானத் தேய்விடப்பட்ட காரணத்தால் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 317,165 இனால் அதிகரித்து விரிவான வருமானக் கூற்றில் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சான்றுபடுத்தப்பட்ட பட்டியல்களின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 03 வீதிகளின் பெறுமதி ரூபா 4,295,181 ஆன போதிலும், அது ரூபா 3,838,648 ஆக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன மானியங்கள் ரூபா 456,533 இனால் குறைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் மீண்டெழாத செலவினங்களுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் ரூபா 313,893 ஆன போதிலும், அது 562,822 ஆக ரூபா 251,929 இனால் அதிகரித்து மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | கடந்த வருடத்தில் சொத்துக்கள் தவறாக மூலதனமாக்கப்படல் திருத்தப்படாமை மற்றும் மிகையீன் (பற்றாக்குறை) இனங்காணப்படாத மூலதன மானியங்கள் கணக்கின் ஆரம்ப மீதி திரண்ட நிதியத்தில் காண்பிக்கப்பட்ட காரணத்தால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளடியான திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 1,515,378 இனால் அதிகரித்து தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கங்களின் கீழ் வருமானக் கூற்றின் வேறுபாடாக இனங்காணப்பட்ட வருமானம் ரூபா 9,023,017 தவறாக சீராக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம தேறிய சொத்துக்கள் ரூபா 367,860,684 ஆன போதிலும், தேறிய சொத்துக்கள் / மூலதன மாற்றங்கள் கூற்றீன் பிரகாரம், அது ரூபா 362,238,089 ஆனமையால் ரூபா 5,622,595 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கு வைக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 228,690,000 பெறுமதியான 143.75 ஏக்கர் காணிகளுக்குரிய சாட்டுதல் கோரிக்கை, காணி அளவீட்டு அறிக்கைள் மற்றும் சாட்டுதல் உரித்துறுதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத் தலைவரியால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதேச செயலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் காணிகளை அளவிட்டு உரிய பணிகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரையிலும் பிரதேச செயலகத்தினால் அந்த பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. | கையளிப்பு உரித்துறுதிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தரப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக | சபைக்கு சொந்தமான 07 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் | பிரதேச சபைக்கு சொந்தமான நிதியங்கள் போதுமானதாக காணப்படாத | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காரணத்தால், 2021 ஆம் ஆண்டின் போது 07 வாாகனங்களுக்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்ததுடடன், அந்த வருடத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தினை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 1,596,089 ஆக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 777,540 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி தீக்கிரையான பிலசரு பிரிவில் பொருத்தப்பட்டிருந்த மணியடிக்கும் இயந்திரத்திற்கு ஏற்பட்ட ரூபா 800,000 ஆன நட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்காண நி.பி. 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணைப் பணிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | நி.பி.104 இன் பிரகாரம், பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கடன் பட்டோர் மீதியில் நிலவிய 02 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்படாத ரூபா | வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திய பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு உரிய | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 3,757,053 ஆன மீதி தொடர்பில் ஆராய்ந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்கின்றேன். | |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் வியாபாரன் கடன் கொடுத்தோர் மீதியினுள் உள்ள 02 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படும் ரூபா 3,776,712 ஆன மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதா என சான்றுபடுத்தலைப் பெற்று கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்கின்றேன். | கடன் கொடுத்தோர் மீதியை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 3,991,950 பெறுமதியான 08 சொத்துக்கள் 03 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமமாக விளைவற்றுக் காணப்பட்டது. | பொறியியல் பரிந்துரை கிடைத்த பின்னர் ஏலமிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | பயன்படுத்துவதற்கு அல்லது உரிய முறையில் ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்ததப்படுகின்ற போதிலும், சபைக்கு உரித்தற்ற ரூபா 22,150,000 கிரயமான 08 வாகனங்களின் உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரித்தினை சுவீகரிப்பதற்க உரிய உரிய தரப்பினருக்கு எழுத்த மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் கையளிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள், பணிகள் அல்லது மூலதன பணியிலான தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு, நிறைவு செய்வதற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 28,860,909 உடன்படிக்கை பெறுமதியுடைய 16 அச்சுக்கல் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. | இந்த செயற்திட்டத்தை கையேற்பதற்கு ஒப்பந்தததாரர்கள் முன்வராத காரணத்தால் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | ஒப்பந்தம் செய்த செயற்திட்டங்களை நிறைவு செய்ய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியா பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா 1,967,544 கிரயமான 02 செயற்திட்டங்களின் அத்திகதியில் உள்ளபடியாக ரூபா 438,853 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத போதிலும், தற்போது பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |